**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.25/2024** |
| Sessions : | | | |

Deposition of witness for :

| | |
|---|---|
| Prosecution : | **P.W. 7** |
| Defence : | **D.W.** |
| Court : | **C.W.** |

| | | | |
|---|---|---|---|
| **Name :** | சிவகாம சுந்தரி | **S/o.(or)W/o. :** | |
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **24.02.2025**

**அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 1, 2, 3, 5 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது புதுக்கோட்டைமாவட்டம் அறந்தாங்கி மாவட்ட உரிமையியல் நீதிபதியாக பணிபுரிந்து வருகிறேன் கடந்த 2021 ஆம் ஆண்டு நான் பெரம்பலூர் மாவட்டம் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் குன்னம் நீதிமன்றத்தில் நீதிபதியாக பணிபுரிந்து வந்தபோது கூடுதல் பொறுப்பாக வேப்பந்தட்டை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் பொறுப்பும் வகித்து வந்தபோது கடந்த 19.04.2021 அன்று வி.களத்தூர் காவல்நிலைய குற்ற எண்.67/2017 வழக்கில் புகார்தாரரான நல்லதம்பி த/பெ.கிருஷ்ணசாமி என்பவரின் வாக்குமூலத்தை குவி.முச பிரிவு 164 ன் படி பதிவு செய்ய வேண்டும் என்று வி.களத்தூர் காவல்நிலைய காவல்ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோளின் படி 05.05.2021ந் தேதி சம்மன் அனுப்பி வைக்கப்பட்டு அதன்படி 07.05.2021ந் தேதியே அன்று சாட்சி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும் என்று காவல்ஆய்வாளருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டது.

அந்த அறிவிப்பை பெற்றுக்கொண்ட வி.களத்தூர் காவல்ஆய்வாளர் சுமதி என்பவர் 07.05.2021 அன்று பகல் 2.45 மணிக்கு சாட்சி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினார் சாட்சி வி.களத்தூர் காவல்நிலைய ஆய்வாளர் சுமதி அடையாளம் காட்டினார். மேற்படி சாட்சியான புகார்தாரர் நல்லதம்பி த/பெ.கிருஷ்ணசாமி என்பவரிடம் வாக்குமூலம் பதிவு செய்ய தீர்மானித்து நீதிமன்ற அறையில் வைத்து சாட்சியையும் வாக்குமூலம் தட்டச்சு செய்தவற்கு உதவியாக நீதிமன்ற தட்டச்சரையும், சுருக்கெழுத்து தட்டச்சரையும் தவிர வேறு யாரும் அனுமதிக்கப்படவில்லை. சாட்சி மற்றும் சம்பந்தப்பட்ட காவல்துறை அதிகாரிகளை தவிர நீதிமன்றத்தில் யாரும் அனுமதிக்கப்படவில்லை. சாட்சியிடம் வாக்குமூலம் பதிவு செய்வதற்கு முன்பாக குற்றவியல் நடைமுறை விதி 74-ன் படி கேள்விகள்எழுப்பப்பட்டு அவர் தன்னிச்சையாக யாருடைய வற்புறுத்தலின்றி வாக்குமூலம் அளிக்க முன்வருகிறார் என்று திருப்தியுற்று சாட்சியிடம் பகல் 3 மணியளவில் சாட்சியிடம் வாக்குமூலம் பதிவு செய்ய ஆரம்பித்து பகல் 3.35 வரை வாக்குமூலம் பதிவு செய்து முடிக்கப்பட்டது. மேற்படி வாக்குமூலம் சாட்சியால் நேரடியாக சொல்லப்பட்டு என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பிறகு அவரிடம் கையெழுத்து பெறப்பட்டது. அவ்வாறு நான் பதிவு செய்த வாக்குமூலம் அ.த.சா.ஆ.4 ஆகும். அந்த வாக்குமூலத்தை வீடியோ ரெக்கார்டு செய்த சிடி அ.த.சா.ஆ.5 ( 2 எண்ணிக்கை)

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் என்னுடைய தனி அறையில் (Chamber) வைத்து தான் வாக்குமூலம் பதிவு செய்தேன். காவல்துறையை சேர்ந்த வீடியோ எடுக்கும் நபர் தான் வீடியோ ரெக்கார்டு செய்யப்பட்டார். வீடியோ எடுத்த நபர் வீடியோவை ஆன் செய்துவிட்டு வெளியே போய் விட்டார். வாக்குமூலம் முடிந்த பிறகு வந்து ஆப் செய்தார். நான் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் வைத்து தான் பதிவு செய்ய வேண்டும் என்றும்

தனி அறையில் பதிவு செய்வது சட்ட முரணானது என்றும் சொன்னால் சரியல்ல. வாக்குமூலம் முழுவதும் சாட்சி சொல்ல தட்டச்சு செய்யப்பட்டது தான். நான் கையினால் கேள்வி பதிலையும் எழுதவில்லை. எனக்கு ஆய்வாளர் கொடுத்த விண்ணப்பத்துடன் முதல் தகவல் அறிக்கை நகல் மற்றும் குவிமுச 161 பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம் இணைக்கப்படவில்லை. குற்ற எண் மட்டும் தான் குறிப்பிட்டிருந்தார்கள். நல்லதம்பியை ஆய்வாளர் 25.09.2023ல் தான் விசாரித்தார் என்றால் எனக்கு தெரியாது. 07.05.2021ல் நான் வாக்குமூலம் பதிவு செய்தேன். நல்லதம்பி என்னிடம் வாக்குமூலம் கொடுத்த போது சிவில் வழக்கு நிலுவையில் உள்ளது பற்றியும் குறிப்பிட்டுள்ளார். அவர் வாக்குமூலம் கொடுக்கும்போது என்னை கொலை செய்ய நோக்குடன் சதித்திட்டம் தீட்டி என்று குறிப்பிட்ட வார்த்தைகள் சொல்லவில்லை. சாமிதுரை த/பெ பெரியசாமி மண்வெட்டி கழியில் வரும் இரும்பு பைப்பால் அடித்தாக சொல்லியுள்ளார். கூடுதல் துணைக்கண்காணிப்பாளரும், மங்களமேடு காவல் ஆய்வாளரும் வாக்குமூலம் பதிவு செய்த அன்று நீதிமன்றத்திற்கு வரவில்லை. விண்ணப்பம் மங்களமேடு ஆய்வாளர் தான் கொடுத்தார். நல்லதம்பி என்னிடம் கொடுத்த வாக்குமூலத்தில் மருத்துவமனையில் கொடுத்த வாக்குமூலம் தன்னுடையதல்ல என்றும், அதில் உள்ள கையெழுத்தும் தன்னுடையதல்ல என்றும் கூறியுள்ளார். நான் பணியில் இருந்த காலத்தில் இந்த வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதா என்று எனக்கு ஞாபகமில்லை. நல்லதம்பி உயர் நீதிமன்றத்திற்கு சென்று உத்தரவு வாங்கி வந்தது பற்றி எனக்கு அளிக்கப்பட்ட விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆய்வாளர் தூண்டுதலின் பேரில் தான் நல்லதம்பி என்னிடம் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> – இல்லை.

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.